ANNAMALAI UNIVERSITY ISAI TAMIL SERIES-Vol. VI.

தமிழிசைப் பாடல்கள்

கோபாலகிருஷ்ண பாரதியார்

1049
3.88

ஆறாந் தொகுதி

(இரண்டாம் பதிப்பு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1955
MADRAS

WITH COURAGE AND FAITH

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

1955

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து இசைத்தமிழ் வெளியீடு - VI

கோபாலகிருஷ்ண பாரதியார்

இயற்றிய

தமிழிசைப் பாடல்கள்

சுரதாளக் குறிப்பு எழுதித் தொகுத்தவர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து இசைக்கல்லூரி

வீணை விரிவுரையாளர்

திரு. வி. எஸ். கோமதிசங்கர ஐயர் அவர்கள்.

பாடல்களைத் திருத்தி உதவியர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழாசிரியர்

வித்துவான் மு. அருணாசலம் பிள்ளையவர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால்

திருச்சி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்டில்

பதிப்பிக்கப்பெற்றது.

1955

பதிப்பு உரிமை]

[விலை ரூபாய்

ANNAMALAI UNIVERSITY ISAI TAMIL SERIES-Vol. VI.

தமிழிசைப் பாடல்கள்

ஆறாந் தொகுதி

(இரண்டாம் பதிப்பு)

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1955

தமிழிசைப் பாடல்கள்
ஆறுந்தொகுதி

முதற் பதிப்பு 1944
இரண்டாம் பதிப்பு 1955

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

இயற்றியவை

கடவுள் வாழ்த்து

ஆசிரிய விருத்தம்

பூவார் மணம்போல் உலகமெலாம்
பொருந்தி யியக்கும் பெரும்பொருளே
புனிதம் நிறைந்த வுணர்வுடையோர்
புகழிற் கிடக்கும் புண்ணியனே

நாவார் கலைகள் துணிபொருளா
நவில்நா யகனே மெய்யுணர்வின்
நலமார் வடிவே யகவிருளை
நலிந்து விளங்கி நல்லன்பர்

தூவார் உளத்திற் சுடர்விளக்கே
துகளற் றொடுங்கித் தமைமறந்து
துய்ப்பார்க் கினிய செழுந்தேனே
தோன்றாத் துணையே அறுவரெனும்

மேவார் தமைச்செற் றுளந்தெளிந்தோர்
வினைமா சறுக்கும் மெய்ப்பொருளே
விரும்பிப் பணியும் எம்மையருள்
வெள்ளத் தியைத்துக் காத்தருளே.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வாழ்த்து

கட்டளைக் கலித்துறை

கண்ணார் மணியிற் புரப்போ ரெனும்பொருட் கார்பொழிந்த
தண்ணார் நிதிநீர்ச் செழிப்பிற் கலைப்பயிர் தான்வளர்க்கும்
அண்ணா மலைப்பல் கலைக்கழ கப்பே ரணிநிலையம்
விண்ணார் புகழொடு நாணாளு மோங்கி விளங்குகவே.

உள்ளுறை

1. கடவுள் வாழ்த்தும் பல்கலைக்கழக வாழ்த்தும்

2. செட்டிநாட்டரசரின் நிழற் படம்

3. செட்டிநாட்டரசர் வாழ்த்து

4. செட்டிநாட்டரசர் டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் நிழற்படம்

5. இசைக்கல்லூரியின் நிழற் படம்

6. முகவுரை (மகாமகோபாத்தியாய பண்டித மணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்) XI

7. இரண்டாவது பதிப்பின் முன்னுரை வீணை விரிவுரையாளர் திரு. வி. எஸ். கோமதி சங்கர ஐயரவர்கள் XV

8. கோபாலகிருஷ்ண பாரதியார் வரலாற்றுச் சுருக்கம் —வித்துவான் திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்கள் XIX

9. குறியீடுகளின் விளக்கம் XXIX

10. பாடல்முதற் குறிப்பட்டவணை XXXI

11. இராகங்களின் பெயர் விளக்கம் XXXVII

12. கீர்த்தனைகள் (87) 1—367

13. கண்ணி (1) 367—368

14. ஆனந்தக்களிப்பு (1) 369—373

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய
செட்டி நாட்டரசர்
உயர்திரு. டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார்



ஊக்கம் உறுதி உணர்ச்சி யருஞ்செயலின்
ஆக்கம் அறம்புகழன் பாண்மைமுதல்—நீக்கமறக்
காண்டற் கமைந்த கவினுரு அண்ணாமலைமன்
ஆண்டகையின் நல்லுருவ மாம்.

—மகாமகோபாத்தியாய—பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியார்.

மகாமகோபாத்தியாய—பண்டிதமணி

திரு. மு. **கதிரேசச் செட்டியார்** அவர்கள் கூறிய

வாழ்த்து

சீர்மலி கொடையால் அறிவினால் ஆற்றுஞ்
செயற்கருஞ் செயலினால் உலகிற்

பேர்மலி புகழாற் பல்கலைக் கழகம்
நிறுவிய பெருமையாற் சிறந்தோன்

ஏர்மலி தருநல் இசைத்தமிழ் வளர்க்கும்
ஏந்தல்நம் செட்டிநாட் டரசாம்

நார்மலி யுளத்தண் ணாமலை வள்ளல்
நலமுற நீடுவா ழியவே.

அண்ணாமலைப் பல்கலைக்கழக இணை வேந்தர்
செட்டிநாட்டரசர்
டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து
தமிழ் ஆராய்ச்சிப் பகுதித் தலைவர்
மகாமகோபாத்தியாய பண்டிதமணி
திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் எழுதிய

முகவுரை

தமிழிசை வளர்ச்சி குறித்துப் பெருங்கொடை வள்ளலாகிய செட்டிநாட்டரசரவர்களின் ஆதரவில், அண்ணாமலைப் பல்கலைக்கழகமுகமாக வெளியிடப்பெற்றுவரும் இசைத்தமிழ் வெளியீடுகளுள் இஃது ஆருந்தொகுதியாகும். இதன்கண் ஆனதாண்டவபுரம், கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய கீர்த்தனைகள் 87ம், கண்ணி 1ம், ஆனந்தக்களிப்பு 1ம் ஆக எண்பத்தொன்பது உருப்படிகள் அடங்கியுள்ளன. இவற்றின் ஆசிரியராகிய கோபாலகிருஷ்ண பாரதியாரின் வரலாற்றுச் சுருக்கம் தனியே எழுதி இதன்கட் சேர்க்கப்பட்டுள்ளது. பாரதியார் தில்லைக்கூத்தனைப்பற்றித் தனித்தனியாகப் பாடிய கீர்த்தனைகளே இதன்கண் தொகுக்கப்பட்டுள்ளன.

பாரதியாரின் இசைப்பாடல்கள் பொருள்நயத்தாலும் இசைவளத்தாலும் சிறந்து இனிமை மிக்குப் பாடுவோர் கேட்போர் எல்லோரையும் தம்வயப்படுத்தும் பான்மைய என்பது இசை உலகம் அறிந்தது. இவர்கள் இயற்றிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளின் இசை யினிமையையும் பொருள் நயத்தையும் அநுபவித்தவர்கள் இதனை நன்குணர்வர். இதன்கண் அடங்கிய கீர்த்தனைகளின் அநுபல்லவி—அல்லது சரணங்களில் அவ்வவ்விராகங்களின் சுவை மிக்க அழகு பொருந்தும் படியான மத்தியம கால நடை பெரும்பாலும் அமைந்திருப்பது பாராட்டத்தக்கது. இக்கீர்த்தனைகளின் இயலமைப்பில் இசை வண்ணம் பொருந்தி இன்புறுத்துமாறு எழுத்துக்களும் சொற்களும் அமைந்திருப்பது தமிழிசையின் தனிச் சிறப்பைப் புலப்படுத்துவதாகும். இதற்குச் சான்றாக மாயாமாளவ கௌளை, வேகடை,

பூர்வகல்யாணி, பேஹாக், காபி, நாயகி, காம்போதி முதலிய இராகங்களில் அமைந்த கீர்த்தனைகளைக் காணலாம். இயற்பாடல்களின் கருத்துகளுக்கும் சுவைகளுக்கும் ஏற்ற இராகங்களில் வர்ணமெட்டுகள் அமைதல் பயில்வார் கேட்போர்களுக்கு மிகவும் இன்பஞ் செய்வதாகும். இம்முறை இக்கீர்த்தனைகளில் நன்கு அமைந்துள்ளது.

இதுகாறும் வெளிவராமலிருந்த இத்துணைச் சிறந்த அரிய தமிழ்க் கீர்த்தனைகளுள் 54 உருப்படிகள் சிதம்பரம் திரு. இராசரத்தின தீட்சிதர் அவர்களும், 35 உருப்படிகள் வேறு சில அன்பர்களும் தந்து உதவினர். திரு. இராசரத்தின தீட்சிதரவர்கள் இக்கீர்த்தனைகளின் ஆசிரியராகிய பாரதியாருடனிருந்து வர்ணமெட்டுகளை அறிந்த அவர் தம் மாணவர் பொன்னுசாமி தீட்சிதரின் மாணவராவார். தம் முதுமைப் பருவத்தின் தளர்ச்சியைப் பொருட்படுத்தாமல் பல்கலைக் கழகத்தார் வேண்டுகோளை ஏற்று, தாம் அறிந்தவாறு கீர்த்தனைகளின் வர்ணமெட்டுகளைப் பாடிக்காட்டினர். அவர்கள் பாடிய முறைப்படி அவற்றிற்குச் சுரதாளக் குறிப்புகள் அமைக்கப்பட்டன. தமிழிசையில் ஈடுபட்ட ஏனைய சில புலவர்கள் பாடிக் காட்டியபடி மற்றைய உருப்படிகளுக்கும் சுரதாளக் குறிப்புகள் அமைக்கப்பட்டன. இதன்கண் அடங்கிய கீர்த்தனைகள் 89ல், இப்பல்கலைக்கழகத்து வீணையாசிரியர் திரு, V. S. கோமதிசங்கரையர் அவர்கள் தனியே உருப்படி 35-க்கும், அவர்களும், வீணையாசிரியர் திரு. K. S. நாராயணசாமி ஐயரவர்களும் சேர்ந்து உருப்படி 43-க்கும், இசையாசிரியர் திரு. T. N. சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் உருப்படி 11-க்கும் ஆக, சுரதாளக் குறிப்புகள் திருத்தஞ் செய்தும் பாடும் முறைக்குரிய சங்கதிகளைச் சேர்த்தும் உதவிபுரிந்தனர்.

இதன்கண்ணுள்ள கீர்த்தனைகளின் பல்லவி, அநுபல்லவி, சரணங்கள் ஆகிய உறுப்புகளில் சிதைந்தும் இடமாறியும் பிறழ்ந்தும் காணப்பட்டவற்றை நன்ருகச் செப்பனிட்டு ஒழுங்காகத் திருத்தியமைத்துத் தந்ததோடு, இயற்பாட்டுக்களில் அச்சுப்பிழை நேராமற் பார்த்தும் கோபாலகிருஷ்ண பாரதியாரின் வரலாற்றுச் சுருக்கத்தை எழுதித் தந்தும் உதவியவர் இப்பல்கலைக்கழகத்துத் தமிழாசிரியர் வித்வான் திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்கள் ஆவர். வீணையாசிரியராகிய, திரு.

V. S. கோமதிசங்கரையர் அவர்கள் தம் முயற்சியால் பல இடங்களிலும் சிதறிக்கிடந்த 35, உருப்படிகளைத் தொகுத்துத் தந்ததோடு எல்லாவற்றையும் அச்சிடுவதற்கு ஏற்ற முறையில் கையெழுத்துப்படி செய்தும், அச்சுப்பிழை நேராமல் திருத்தியும் உதவிபுரிந்தனர். முன்னைப் பதிப்புகளிலில்லாத இராகங்களின் அகர வரிசை அட்டவணை இதன்கட் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. 'சிவபெருமான் திருவடியைத் துணையாகப் பற்றினர் முடிவில் என்றும் அழிவில்லாத பேரின்பம் எய்துவர்' என்னும் குறிப்புத் தோன்ற இதன்கண் "பாதமே துணை ஐயனே" என்னும் முதற்குறிப்புக் கீர்த்தனை முதலிலும் ஆனந்தக் களிப்பு இறுதியிலும் அமைக்கப் பட்டன. இப்புத்தகம் அச்சிட்டு வெளிவருவதற்கு இடையருத முயற்சி மேற்கொண்டு வேண்டுவன செய்தவர் இப் பல்கலைக் கழகத்துத் தமிழ்விரிவுரையாளரும், தமிழிசை யாலோசனைக் குழுவின் அமைச்சருமாகிய பண்டித, வித்வான், திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்களாவர்.

தமிழ் மக்களின் உள்ளங்குளிர இன்னோரன்ன அரிய இனிய தமிழிசைப் பாடல்கள் வெளிவருதற்கு உதவிபுரிந்தும் ஊக்கமுறுத்தியும் துணை நிற்பவர்கள் செட்டிநாட்டு ராஜா சர் அவர்கள் என்பதை மீண்டும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். செயற்கருஞ் செயலாகிய தமிழிசை வளர்ச்சியை மேற்கொண்டு, நேர்ந்த இடையூறுகளையெல்லாம் தக்க முறையிற் பொறுமையோடு களைந்து இசை இன்பத்தை நம் தாய் மொழி மூலம் அநுபவிக்க உதவிவரும் அவர்கள் நன்றி தமிழ் மக்களால் பெரிதும் நினைவுகூர்ந்து பாராட்டத் தக்கது.

மறைந்து கிடந்த அரிய பாடல்களைத் திரட்டித் தந்தும், வர்ணமெட்டுகளைப் பாடிக் காட்டியும், சுரதாளக் குறிப்புகள் எழுதியும், பாடல்களைச் சீர்திருத்திச் செப்பனிட்டும், அச்சுப் பிழை நேராமல் திருத்தம் செய்தும், விரைவில் அச்சிட்டு வெளிவர வேண்டுவன செய்தும், இவ்வெளியீட்டிற்கு உதவி புரிந்த அன்பர்கள் எல்லோர்க்கும் தமிழிசை ஆலோசனைக் குழுஉத் தலைவன் என்ற முறையில் என் நன்றியறிவைத் தெரி வித்துக்கொள்ளுகின்றேன்.



இசைக்கல்லூரி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இரண்டாம் பதிப்பின்

முன்னுரை.

திரு. வி. எஸ். கோமதிசங்கர ஐயர்

(வீணை விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

எழுதியது.

அண்ணாமலைப் பல்கலைக் கழக முகமாகச் செட்டிநாட்டரசர் அவர்களின் ஆதரவினால் வெளியிடப்பெற்று வரும் இசைத்தமிழ் வெளியீடுகளுள் இஃது ஆறாந் தொகுதியாகும். ஆனந்தாண்டவபுரம், கோபாலகிருஷ்ண பாரதியாரவர்கள் சரித்திரக் கீர்த்தனைகளாகவும், நாடகக் கீர்த்தனைகளாகவும், கும்மி கோலாட்டம், சிந்து, லாலி, நலுங்கு முதலிய உருப்படிகளாகவும், நடராஜப் பெருமானைத் தெரிசிக்கும்பொழுதெல்லாம் தனித்தனியாகப் பாடிய விடுதிக்கீர்த்தனங்களாகவும் பலபடியாக நூற்றுக்கணக்கில் இயற்றியுள்ளார். அவற்றில் நடராசப் பெருமானைக் குறித்துப் பாடிய தனிக் கீர்த்தனங்களே இப்பதிப்பில் தொகுத்துச் சுரப்படுத்தி வெளியிடப்பெற்றுள்ளன.

பாரதியாரின் இசைப் பாடல்கள் தனித்த பண்புடையவை. கேட்போரின் உள்ளத்தை அதிவிரைவில் உணர்ச்சி பெருகச் செய்பவை. பக்திப் பெருக்கத்தை ஊட்ட வல்லவை. சாகித்தியத்தை வசனமாகச் சொல்லும்போதே பொருள் நயத்தையும், பொருட் செறிவையும், பொருளுணர்ச்சியையும் ஒருங்கே தர வல்லவை. இசையறியாதவர்களும் சாகித்தியத்தை மட்டிலும் வசனமாகச் சொல்லும்போதும் அதில் ஒரு இயற்கையான இசை தானே வந்து சேர்ந்துகொள்ளும். இவ்விசைப் பாடல்கள் பொருள் நயத்தோடு நல்ல இசைவளமும் சேர்ந்து அமைந்திருப்பதனால் இவற்றைச் சாமானியர் பாடினாலும் பாடுவோரையும் கேட்போரையும் தம் வயப்படுத்தும் ஆற்றல் இயற்கையாகவே அமைந்திருப்பதை யாவரும் அறிவர்.

இவருடைய கீர்த்தனைகளில் மத்திமகால நடையுள்ள சாகித்தியச் சொற்களும், ஜதிக்கோவைகளும் மலிந்து இசையின் வனப்பை அதிகரிக்கச் செய்கின்றன. இப்புத்தகத்திலுள்ள கீர்த்தனைகளெல்லாம் பண்டித பாமர மக்களும் அறிந்ததான லட்சிய இராகங்களிலேயே அமைந்து எளிமையோடு விளங்குகின்றன. இக் கீர்த்தனைகளை கச்சேரிகளில் பாடும்போது இசையினிமையானது நல்ல மேளக்கட்டுடன் அமைவதுடன், பாடுவோருக்கு நல்ல சுறுசுறுப்பையும் ஓர் உற்சாகத்தையும் தரும் என்பதில் ஐயமில்லை.

இவரது கீர்த்தனைகள் ஒரு சிலவே அக்காலத்தில் பாடப்பட்டு வந்தமையால் ஒரு புத்தக அளவுக்குரிய உருப்படிகள் வேண்டுமே என்று அதிக முயற்சியுடன் தேடிவரும் பொழுது சிதம்பரம் திரு. இராசரத்தின தீக்ஷிதர் அவர்கள் 54-உருப்படிகளுக்கு அதன் வர்ணமெட்டைப் பாடிக் காட்டினார்கள். இன்னும் பல உருப்படிகள் வேண்டியிருந்ததினால் எனக்குக் கிடைத்த சில சந்தர்ப்பங்களிலும், விடுமுறை நாட்களிலும், மதுரை, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி, தஞ்சை முதலிய ஊர்களில் லட்சிய முறையிற் பாடப்பட்டுவந்த கீர்த்தனைகளை அவரவர்களைப் பாடச் செய்து சுரப்படுத்தி 35- கீர்த்தனைகளைச் சேகரித்தேன். ஆக 89-உருப்படிகளும் பாரதியாரின் இசைமுறை பிறழாமல் இப்பதிப்பில் உருவகப்படுத்தியுள்ளன.

திரு. இராசரத்தின தீக்ஷிதரிடமிருந்து இக்கீர்த்தனைகளை சுரப்படுத்தி எழுதும் அக்காலத்து இங்கு வீணை ஆசிரியராக இருந்த திரு. K. S. நாராயணசாமி ஐயர் கூட இருந்து எனக்கு உதவிசெய்தார். இசையாசிரியர் திரு. T. N. சிவசுப்பிரமணிய பிள்ளையவர்கள் 11-உருப்படிகளுக்குச் சுர நொடேஷன் எழுதி உதவினார்.

இதிலுள்ள கீர்த்தனைகள் ஆரம்ப திசையில் பல்லவி அனுபல்லவி சரணம் ஆகிய இடங்களில் சாகித்தியம் இடமாறியும் சிதைந்தும் பிறழ்ந்தும் இருந்ததை நல்லமுறையிற் சீர்திருத்தி சிறந்த உருவாக்கித் தந்தவர் இப்பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்கள் ஆவர். இவர், மாணவரின் மனப்பதிவுக்கியைய

திரு. கோபாலகிருஷ்ண பாரதியாரின் சரித்திரத்தை இரத்தினச் சுருக்கமாக வரைந்தும் தந்துள்ளார்.

இக்காலத்துக்கேற்பப் பாடும் முறைகளில் சில சங்கதிகளைச் சேர்த்தும், சில திருத்தங்கள் செய்தும், இராகங்களின் முக்கியமான லட்சணக் குறிப்புக்கள் எழுதப்பெற்றும் இரண்டாம் பதிப்பாக இந்நூல் வெளிவருகிறது. முன்பதிப்பில் 90-உருப்படிகள் எழுதப்பெற்றன. அவற்றில் "இனிமேலாயினும்" என்ற தர்பார் இராகக் கீர்த்தனையானது வையை இராமசாமி சிவனவர்கள் இயற்றியது. அது உருமாறி இவரது கீர்த்தனையில் சேர்ந்துவிட்டது. ஆதலால் அக்கீர்த்தனம் இப்பதிப்பில் வெளியிடப்படவில்லை.

திரு. இராசகோபாலாசாரியாரவர்கள் கவர்னர் ஜனரலாக இருந்தபொழுது, அவர்கள் பெயரால் கோபால கிருஷ்ண பாரதியாரின் பாடல்களை நமது பல்கலைக் கழகத்து மூலம் வெளிவந்த இத்தொகுதியிற் குறித்துள்ள இராக தாள சுர நொடேஷன் படி பாடுபவர்களுக்கு ரூபாய் இருநூற்றைம்பது பெறுமானமுள்ள ஓர் அழகிய தம்புரா ஒன்று பரிசளிப்பதென்று நமது செட்டிநாட்டரசர் பெருமான் அவர்களால் ஓர் பரிசுத் திட்டம் ஏற்பாடு செய்யப்பெற்றது. அதன்படி சென்னைத் தமிழிசைச் சங்கத்தில் இப்பரிசுகள் ஆண்டுதோறும் வழங்கப் பெற்று வருகிறது என்பதே இப் பாடல்களின் சிறப்புக்களுக்கு ஓர் நல்ல அறிகுறியாகும்.

நடராசப் பெருமானிடம் நிரம்பிய பக்தியும் சீலமும் உள்ள கோபாலகிருஷ்ண பாரதியாரவர்களுடைய கீர்த்தனைகளுக்குச் சுரப்படுத்தவும், பரிசோதித்துத் தொகுத்து புத்தகமாக்கவும் வாய்ப்பளித்த பல்கலைக் கழகத்தார்க்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவி நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்த பெருங்கொடை வள்ளல் செட்டிநாட்டரசர் ராஜா சர். அண்ணாமலை வள்ளலாரவர்கள் பெரும் புகழ்போல், தமிழிசை நாளும் வளம்பெற அல்லும் பகலும் இடைவிடாது உழைத்து வரும் அவருடைய திருமகனாரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து இணைவேந்தரும் ஆகிய டாக்டர் ராஜா சர். முத்தைய செட்டியாரவர்களுக்குத் தமிழ் மக்களுடைய அன்பு கலந்த நன்றி என்றும் உரியதாகும்.

C

உ

கோபாலகிருஷ்ண பாரதியார்
வரலாற்றுச் சுருக்கம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழாசிரியர்

வித்துவான் திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்கள்

எழுதியது

இயலிசைப் புலவராகிய கோபாலகிருஷ்ண பாரதியா ரென்னும் பெரியார், இற்றைக்குச் சிறிதேறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர், நாகபட்டினத்தைச் சார்ந்த நரிமணம் என்னும் சிற்றூரிற் பிறந்தவர்; அந்தணருள் வடமர் என்னும் வகுப்பினர். இவருடைய தந்தையார் இராமசாமி பாரதி யென்பவராவர். இவருடைய முன்னோர்கள் சிறந்த இசைப் பயிற்சியுடையவர்கள்.

பாரதியார் இளமைப் பருவத்திலே வடமொழியை முறையாகக் கற்றுக் காவிய நாடகங்களிலும் அத்துவித நூல்களிலும் பயிற்சியடைந்தவர். இவர், நன்னிலத்துக்கு அணிமையிலுள்ள முடிகொண்டான் என்னும் ஊரிலும் மாயூரத்திற்குக் கிழக்கேயுள்ள ஆனதாண்டவபுரத்திலும் (ஆனந்தத் தாண்டவபுரம்) சில சில ஆண்டுகள் வாழ்ந்து வந்தமையால், முடிகொண்டான் பாரதியாரென்றும் ஆனதாண்டவபுரம் பாரதியாரென்றும் வழங்கப்பெறுவர். அக்காலத்தில் மாயூரத்தில் அநுபவ ஞானியாக வாழ்ந்துவந்த கோவிந்த சிவம் என்னும் பெரியாரைத் தமக்கு ஞானாசிரியராகக் கொண்டு அவர்பால் வேதாந்த நூல்களையும் யோக நூல்களையும் பயின்றார். அன்றியும், கைவல்ய நவநீதம், பிரபோத சந்திரோதயம், தத்துவராயர் பாடுதுறை, தாயுமானவர் பாடல் முதலிய தமிழ் நூல்களைப் படித்தமையாலும், பழைய தமிழிசைப் பாடல்கள் பலவற்றைப் பாடிப்பாடிப் பழகியதனாலும் ஓரளவு தமிழறிவும் வாய்க்கப்பெற்றார். மாயூரத்தில் சிறந்த இசைப் புலவர்களும், கதை செய்வோர்களும், தெய்வத் துதி

யான இசைப்பாடல்களைப் பாடிக்கொண்டு ஜயமேற்றுண் போரும் ஆகிய பலர் வாழ்ந்து வந்தமையால் அவர்களுடைய நட்பும் இவருக்கு உண்டாயிற்று. "குலவித்தை கல்லாமற் பாகம்படும்" என்னும் பழமொழிப்படி, பரம்பரைத் தொடர் பால் இவரிடம் இயற்கையில் அமைந்திருந்த இசையறிவும் நாளுக்குநாள் வளர்வதாயிற்று. இங்ஙனம் நல்லோரிணக்கமும் சிவநேயச் செல்வமும் உண்டானமையால் இல்லற வாழ்க்கை யில் வெறுப்புத் தோன்றியது. பிரமசரிய நிலையிற் பிறழாமல் நின்றே தம் வாழ்நாளைக் கழிக்க வேண்டுமென்று உறுதி கொண்டார். வடமொழி தென்மொழிப் பயிற்சியும் சமய நூற் கல்வியும் இசையறிவும் ஒருங்குபெற்றவராதலின், தம் ஞானசிரியராகிய கோவிந்தசிவத்தின்மீது புதிய தமிழிசைப் பாடல்கள் இயற்றத் தொடங்கினர். அவற்றுள் "திங்களுத யம்போலே கோவிந்தசிவமென்றே யிந்தப் பூமியில்வந்த, (அ. ப.) எங்கள் குருநாதருடைய இணையடி தொழுவாய் மனமே (பல்லவி)" என்பது ஒன்ருகும். மயூரத்தம்மாள், பாபநாச முதலியார், பெரியதிருக்குன்றம் சுப்பராமையர் முதலானேர் வர்கள் இயற்றிய பழந்தமிழிசைப் பாடல்கள் பலவற்றை அடிக்கடி பாடிக்கொண்டிருப்பதனுல் கருநாடக இசை முறை யில் நன்கு பயிற்சியுடையவராயினர்.

அப்பால், அமரசிம்மன் என்னும் அரசனுல் ஆதரிக்கப் பெற்றவரும், இந்துஸ்தான இசையில் திறமையுடையவரும் ஆகிய இராமதாசர் என்னும் சிறந்த இசையறிஞர் ஒருவர் திருவிடைமருதூரில் இருந்தார். அவரை யடுத்து அவருக்கு உவப்பான பணி பல புரிந்து இந்துஸ்தான மார்க்க இசையும் பயிலத் தொடங்கினர். சிவபெருமான் பக்கல் இடையருத அன்பும் சைவசீலமும் கருநாடக இசைப் பயிற்சியும் இவரிடம் அமைந்திருப்பதை யறிந்து, இராமதாசர் மனமுவந்து கற்பித்த னர். இதனுல், மகாராஷ்டிரம் முதலிய மொழிகளிலுள்ள இசைப்பாட்டுக்களின் அருமையான முறைகளையும் சிறப்பியல் களையும் இவர் அறிந்துகொண்டார். அக்காலத்து அமரசிம்ம னுடைய ஆஸ்தானப் புலவராயிருந்த கனம் கிருஷ்ணையரும் பாரதியாரிடம் அன்புவைத்துப் பல இசைப்பாடல்களைக் கற் பித்தனர். இங்ஙனம் சில ஆண்டுகள் கழிந்தபின்பு, இராம

தாசர் முதலானவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு மாயூரத்திற்குத் திரும்பினர். நாளாக நாளாக இவருடைய இயலும் இசையும் எல்லோராலும் பாராட்டப்பட்டன. பாரதியார் திருக்கோயிலுக்குச் சென்று சிவ வழிபாடு செய்தலும், பிச்சையெடுத்து உண்ணுதலும், புதிய முறையில் இசைப்பாடல்களை யியற்றிப் பாடுதலும் ஆகிய செயல்களைத் தவறுமற் செய்துவந்தனர். இவருடைய இசையறிவு இவரிடம் அமைந்துள்ள ஒழுக்கச் சிறப்பினுல் மிகவும் விளக்கமுற்றது. இவர் புதியனவாக அமைத்துவரும் இசையமைப்புக்கள் (மெட்டுக்கள்) இசைக்கு மிகவும் பொருத்தமாயிருந்தமையால் இசைவாணர் பலரும் இவரிடத்து நன்கு மதிப்புடையவராய் இவர் அவ்வப்போது இயற்றும் பாடல்களைப் பாடச்செய்து இசையரங்குகளிலும் கதைகளிலும் பாடத்தொடங்கினர். நிற்க,

பாரதியார் இளமைப் பருவத்திலிருந்தே தில்லைப்பதியின்கட் பேரன்பு உடையவராதலின், தில்லைக்கூத்தப்பெருமானுக்கு ஆண்டுதோறும் நடைபெறும் ஆறு அபிடேகங்களுக்கும் தவறுமற் சென்று வணங்குவார். வேதாந்த நூல் யோக நூல்களிற் பயிற்சியுடைமையால் சிற்றம்பலத்தின் உண்மையியல்பையும் அம்பலவாணர் திருக்கூத்தின் தத்துவத்தையும் உள்ளவாறே யுணர்ந்து உள்ளம் உருகி வழிபாடு செய்வார். அப்பெருமான் மீது இவரியற்றிய இசைப்பாடல்கள் மிகப் பலவாகும். இசையரங்குகள் எங்கே நடைபெற்றுலும் ஆங்காங்குள்ள மக்கள் பாரதியார் பாடல்களைப் பாடவேண்டுமென்று இசைவாணர்களைக் கேட்பாராதலால், அவ்விசைவாணர்கள் இவரிடம் வந்து தங்கள் விருப்பத்திற்கேற்ற வண்ணம் சில சில இசைப்பாடல்களை இயற்றித் தரும்படி வேண்டுவர். இவரும் அவர்கள் விரும்பியவாறே பாடல்களை யியற்றி உதவுதலும் உண்டு. அன்றியும், சிறுவர் சிறுமியருடைய தூயவுள்ளங்கள் சிவபத்தியில் ஈடுபடவேண்டுமென்ற நல்லெண்ணத்தாலும், பரமசிவனுடைய உண்மைப்புகழ் யாண்டும் பரவவேண்டுமென்ற உயரிய நோக்கத்தாலும் கும்மி கோலாட்டம் ஊஞ்சல் நலுங்கு லாலி முதலிய இசைப்பாடல்களைச் சிவபரமாகப் பாடி யுதவுவார். அப்பாடல்களின் எளிமையும் இனிமையும் இசையமைப்

பும் இளம் பிள்ளைகளின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளு மாதலால், அவற்றை அவர்கள் விரும்பிக் கற்றுத் திருமணம் திருவிழா முதலான மங்கலச் செயல்கள் நடைபெறுங் காலங் களிற் பாடி யெல்லோரையும் இன்புறச் செய்வர்.

அக்காலத்தில், திருவையாற்றிலிருந்த தியாகையருடைய கீர்த்தனங்களும் இராம பத்திச் சிறப்பும் பலராலும் பாராட் டப்படுதலை யறிந்த இவர், அப்பெரியாரை ஒருமுறையேனுங் காணவேண்டுமெனக் கருதி அங்கே சென்று அவரைக் கண்டு அன்போடு அளவளாவியிருக்கும்போது, தியாகையருடைய மாணாக்கர்கள் ஆபோகி யிராகத்தில் அவரியற்றிய கீர்த்தனத் தைப் பாடிக்கொண்டிருந்தனர். அப்போது தியாகையர், பாரதி யாரைப் பார்த்து "நீங்கள் இந்த இராகத்தில் ஏதேனும் கீர்த்த னஞ் செய்திருக்கிறீர்களா" என்று கேட்டனர். அதற்கு அப் போது ஒன்றும் மறுமொழி கூறாமல் திரும்பிவந்து அன்று இரவிலேயே "சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா" என்ற பாடலை ஆபோகியிற் பாடி முடித்து அடுத்தநாட் காலை யில் அவரிடம் பாடிக்காட்டி அவராற் பாராட்டப்பெற்றனர். அதன்பின் மாயூரம் வந்து, தியாகையர் நாட்டை கௌளை ஆரபி வராளி ஸ்ரீராகம் என்னும் ஐந்து கன இராகங்களிலும் பஞ்சரத்தினம் எனப் பெயரிட்டுப் பாடியிருக்கும் ஐந்து கீர்த் தனங்களைப்போலவே "அரகர சிவசங்கர கருணாகர" (நாட்டை) "சரணாகதியென்று நம்பிவந்தேன்" (கௌளை) "பிறவாத வரம் தாரும்" (ஆரபி) "ஆடிய பாதமே கதி" (வராளி) "மறவாமல் எப்படியும் நினைமனமே" (ஸ்ரீ) என்ற தமிழிசைப் பாடல் களை இயற்றினர், தியாகைய ரியற்றிய பஞ்சரத்தினங் கள் இராமபத்தியுடையார்க்கு உவகை யூட்டியதுபோல, இவரியற்றிய இப்பாடல்கள் சிவநேயச் செல்வம் வாய்ந்த வர்களுக்கு அளவிறந்த மகிழ்ச்சியளித்தன. எளிய நடையில் அமைந்திருத்தலால் யாவரும் வருத்தமின்றிப் பாடஞ்செய்து பாடுவாராயினர்.

பாரதியாருடைய மாணாக்கர்களிற் சிறந்தவர்கள் சிதம் பரம் பொன்னுசாமி தீட்சிதர், சிதம்பரம் இராசரத்தின தீட்சிதர், மாயூரம் இராமசாமி ஐயர், அவர் தம்பிகளாகிய

நடேச ஐயர், சுப்பிரமணிய ஐயர் என்பவராவர். பாரதியார் அம்பலத்தாடும் பெருமானை வழிபாடு செய்யவேண்டி அடிக்கடி தில்லையம்பதிக்குச் செல்லுவார். சில மாதங்கள் அங்கே தங்கியிருப்பதும் உண்டு. அக்காலங்களில் மேற்கூறிய பொன்னுசாமி தீட்சிதர் வீட்டில் இருப்பது வழக்கம். இசையிலும் இசைப்பாடல்கள் இயற்றுவதிலும் வல்லவரும், உருத்திராக்க மணிகளாலாகிய சிவலிங்கத்தைத் தலையில் தாங்கிக்கொண்டு நடராசர் திருமுன் நின்று ஆடல்பாடல்களைச் செய்து மகிழ்பவரும் ஆகிய சிவசங்கர தீட்சிதருடைய நட்பும் இவருக்கு உண்டாயிற்று. கற்றாரைக் கற்றாரே காமுறுதல் இயற்கைதானே! சிதம்பரத்திலே இவரிருக்கும் நாட்களில், பொன்னம்பலத்திற்குத் தெற்கேயுள்ளதும், கிழக்கு நோக்கி ஊர்த்துவதாண்டவ மூர்த்தி யெழுந்தருளியிருப்பதுமாகிய நிருத்த சபையின் வெளி மண்டபத்திலிருந்து தியானம் செய்வார். அம்மண்டபத்தின் தெற்கு சுவரருகில், கையிற் கடப்பாரையும் தோளில் மண்வெட்டியுந் தாங்கிய கோலமாக நந்தனூர் திருவுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. அத்திருவுருவத்தைக்கண்டு நந்தனுருடைய சிவபத்தியை நினைந்து நினைந்து உருகிப் பாராட்டுவார். இவருடைய பத்தி மேலீட்டிற்கு அவ்வுருவம் ஒரு தூண்டுகோலாயிருந்தது. ஒருநாள் இவர் அங்கிருந்து பாடிக்கொண்டிருந்தபோது உடனிருந்த அன்பர்கள் சிலர், இந்தச் சந்நிதியிலேயேயிருந்து சிவ வழிபாடு செய்ய வேண்டுமென்று நந்தனூர் வேண்டிக்கொள்வதாக ஒரு பாடலையியற்றித் தரவேண்டுமென்று கேட்டனர். அவர்கள் விரும்பியபடி "எந்நேரமும் உன்றன் சந்நிதியிலே நான் இருக்கவேண்டுமையா' என்ற பல்லவியையுடைய பாடலை யியற்றினூர். ஒருமுறை சிதம்பரத்தில் திருவிழா நடைபெற்றபோது பிட்சாடனமூர்த்தி உலாப்போந்தருளுவதைக் கண்டு "பிச்சைக்கார வேஷங் காட்டுறீர்" என்ற பாடலைப் பாடினூர்.

திருக்கார்த்திகைத் திருவிளக்குக் காட்சியைக் காணவேண்டித் திருவண்ணுமலைக்குச் சென்று அம்மலையை வலம் வரும்போது தாம் கண்ட காட்சிகளை அமைத்து "கண்ணுலே கண்டேன் வேறொன்றும் எண்ணுமலே நின்றேன்" என்னும் பாட

லைப் பாடினார். இவ்வாறு தலயாத்திரை செய்யுங்கால் அவ்வத்தலங்களில் தாம் நேரில் கண்டு இன்புற்றவற்றையமைத்து இசைப்பாடல்களாகவும் சிந்து முதலிய வேறு உருப்படிகளாகவும் இவர் இயற்றிவருவார். அன்றியும், ஆங்காங்குள்ள அன்பர்கள் விருப்பத்திற்கு இணங்கித் தம் மாணுக்கர்களுடன் சென்று சிவகதை செய்தலும் உண்டு. அக்காலங்களில் இடத்திற்கேற்றவாறு இந்துஸ்தான வழியிலமைந்த உருப்படிகளைப் பாடியும், சிறு சிறு வரலாறுகளை இடையிற் புகுத்தியும், நகைச்சுவையுள்ள செய்திகளை யெடுத்துக்கூறியும் எல்லோரையும் மகிழச் செய்வார்.

நாகப்பட்டினத்தில் கப்பல் வாணிகம் நடாத்திவந்தவரும் சிவநேயமிக்காருமாகிய கந்தப்ப செட்டியாரென்னும் பெருஞ்செல்வரும் வேறு பல அன்பர்களும் விரும்பியபடி, உண்மை நாயன்மார்களுள் ஒருவராகிய நந்தனுருடைய வரலாற்றை இசைப்பாடல் வடிவில் அமைத்து இயற்றி முடித்தார். பல் முறை நினைந்து நினைந்து அவ்வரலாறு பாடி முடிக்கப்பட்டதாதலின் அஃது இவருடைய உலகியலறிவையும் சிவபத்திப் பெருக்கத்தையும் யோகநூற் கருத்துக்களையும் புலப்படுத்துவதாயிற்று. பின்னர் நாகபட்டினத்திலே கந்தப்ப செட்டியாருடைய முயற்சியால் பல செல்வர்களும் இசையறிஞர்களும் கூடிய அவைக்களத்தில் அஃது அரங்கேற்றப்பட்டது. பலரும் பலவகையான பரிசுகள் வழங்கினர். பெரிய புராணத்திற் காணப்படும் வரலாற்றை இவர் தம் கருத்திற்கேற்ப மாற்றியமைத்துக்கொண்டமையாலும் இலக்கணப் பிழைகள் காணப்பட்டமையாலும் தமிழ்ப் புலவர் சிலர் "நந்தன் சரித்திரத்தைக் கேளாதே - வந்த தரித்திரந்தான் மாளாதே" என்று கூறியெதிர்த்தனர். ஆயினும், புதிய இசையமைப்புக்கள், எளிய நடை, சமயநூற்கருத்துக்கள், நகைச்சுவை, இயற்கை வருணனை முதலியன கலந்திருத்தலால் அது பொதுமக்கள் எல்லோர்க்கும் இன்பம் ஊட்டுவதாயிற்று. தமிழ்ப் பெரும் புலவர் ஒருவரிடம் சிறப்புப்பாயிரம் வாங்கிவிட்டால் இக்குறை கூறுவோர் வாயை அடக்கிவிடலாமென்று இவருடைய மாணுக்கர்கள் வற்புறுத்திவந்தனர். அக்காலத்தில் புலவர் திலகமாக விளங்

கிய மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாயூரத்தில் வசித்துவந்தார்கள். பாரதியாருடைய கடவுட் பத்தி முதலிய குண நலங்களையறிந்த பிள்ளையவர்களுக்கு இவரிடம் அன்பு உண்டாயிற்று. இருவரும் அடிக்கடி கண்டு உரையாடி மகிழ்வதும் உண்டு. இந்நிலையில், பாரதியார் தம் மாணவர் கருத்தைப் பிள்ளையவர்களிடம் வெளியிட்டனர். பிள்ளையவர்கள் பாரதியாரிடம் அன்புடையவராயினும் நந்தனார் சரித்திரம் பெரிய புராணத்திலுள்ளவாறே இயற்றப்படாமையாலும், பிழைகள் உடையதாக இருப்பதனாலும் அதற்குச் சிறப்புப்பாயிரங் கொடுக்க விரும்பவில்லை. பாரதியாருடைய விருப்பத்தை மறுப்பதற்கும் மனந்துணியாமல், சிவநேயச் செல்வராகிய தாங்கள் இயற்றிய நூலுக்கு எனது சிறப்புப் பாயிரம் எதற்கு? இசை நூலுக்கு இசையறிந்தவர் அளித்தால் பொருத்தமாக இருக்கும். அன்றியும் எல்லோருடைய நன்மதிப்பும் பெற்ற அந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் வேண்டியதேயில்லை என்று இவ்வாறே அவர் கேட்கும்போதெல்லாம் மறுமொழி கூறிவந்தனர். எவ்வாறாயினும் பிள்ளையவர்களுடைய சிறப்புப்பாயிரத்தைப் பெறவேண்டுமென்று உறுதிகொண்ட பாரதியார், ஒருநாட் பிற்பகலில் பிள்ளையவர்கள் வீட்டிற்குச் சென்றார். பிள்ளையவர்கள் உணவருந்தியபின் சிறிது நேரம் துயில்வது வழக்கம். அன்றும் அவ்வாறே துயின்றுகொண்டிருந்தார். அதனையறிந்த பாரதியார் வீட்டின் வெளித்திண்ணையிலிருந்துகொண்டு நந்தனார் சரித்திரத்திலுள்ள சில பாடல்களைப் பாடினார். இவருடைய இன்னிசை பிள்ளையவர்களைத் துயிலெழுப்பியது. உடனே யெழுந்து சென்றால் பாரதியார் பாட்டை நிறுத்திவிடுவாரென்று கருதி எழுந்து படுக்கையிலிருந்துகொண்டே கேட்கலானார்கள். "கனகசபாபதி தரிசனம் ஒருநாள் - கண்டால் கலிதீரும்" என்ற பாடலையும் வேறு சில பாட்டுக்களையும் பாடினார். அப்பாடல்களின் இசையும் பொருளும் உண்மையாகவே தில்லைக் கூத்தப்பெருமானிடம் உறுதியான அன்பு பூண்ட பிள்ளையவர்களுடைய உள்ளத்தை உருகச் செய்தன. இன்பக் கண்ணீர் ததும்பு நிலையில் எழுந்து பிள்ளையவர்கள் வெளியில் வந்து பாரதியாரை வரவேற்று அடியிற் குறிக்கப்பட்ட சிறப்புப் பாயிரத்தை அன்போடெழுதி யுதவினார்கள்.

சிறப்புப்பாயிரம்

" கோமேவு திருத்தில்லை நடராசப் பெருமான்றுள் கூடி யுய்ந்த
பூமேவு பேரன்பர் திருநாளைப் போவார்தம் புனிதச் சீரைப்
பாமேவு பலவகைய இசைப்பாட்டா லினிமையுறப் பாடி யீந்தான்
ஏமேவு கோபால கிருட்டினபா ரதியென்னும் இசைவல் லோனே."

அக்காலத்தில் மாயூரத்தில் முன்சீபாக இருந்தவரும், பிரதாப முதலியார் சரித்திரம், நீதிநூல், சர்வசமயசமரசக் கீர்த்தனம் முதலிய நூல்களியற்றியவரும் ஆகிய வேதநாயகம் பிள்ளையவர்கட்கும் பாரதியார்க்கும் இசைப்பாடல்களியற்றிவருந் தொடர்பால் நெருங்கிய நட்பு உண்டாயிற்று. தாது வருடத்தில் நேர்ந்த கொடிய பஞ்சத்தால் உணவின்றித் தவித்த ஏழை மக்கட்குத் தாமே பொருளுதவியும் பெருஞ் செல்வர்களைக்கொண்டு பொருளுதவச் செய்தும் அன்னமளித்து ஆதரித்துவந்தமையை நேரிற் கண்ட பாரதியார் உள்ளங்குளிர்ந்து வேதநாயகம் பிள்ளையவர்களுடைய பரோபகார குணத்தைப் பாராட்டி " நீயே புருஷமேரு" என்னும் பாடலைப் பாடினர். பாரதியாருடைய வாழ்நாளில் இஃதொன்றே மக்கள்மேற் பாடப்பட்டதென்பர்.

ஆறுமுக நாவலரவர்கள் ஒருநாள் தில்லைத் திருக்கோயிலில் சிவ வழிபாடு செய்துவரும்பொழுது, பாரதியார் அங்கே ஓரிடத்திலமர்ந்து உள்ளமுருகிப் பாடிக்கொண்டிருந்தார். அப்பாடலைக் கேட்ட நாவலரவர்கள், பாரதியாருடைய அன்பையும், அப்பாடல் சிவபெருமானுடைய திருவருட் சிறப்பைப் பலபடியாக எடுத்துப் பாராட்டு முறையில் அமைந்திருத்தலையும் அறிந்து வியந்து தம் மகிழ்ச்சிக்கு அறிகுறியாகப் பத்து ரூபா பரிசாக அளித்தனர்.

பாரதியார், நந்தனர் சரித்திரம் இயற்றியபின், அன்பர்கள் பலர் விரும்பியபடி இயற்பகை நாயனர், திருநீலகண்ட நாயனர், காரைக்காலம்மையார் என்னும் மூவருடைய வரலாறுகளையும் இசைப்பாடல் வடிவில் இயற்றினரென்பர். இவைகள் அச்சிடப்படாமையால் இப்பொழுது பெரும்பாலும் வழக்கில் இல்லையெனத் தெரிகிறது. மகாவைத்தியநாத ஐயரும்

அவருடைய தமையனாராகிய இராமசாமி ஐயரும் மாயூரத்திற்கு வரும்போதெல்லாம் பாரதியாரிடம் வந்து அளவளாவி மகிழ்ந்து இவரியற்றிய இசைப்பாடல்களைக் கேட்டுப் பாடஞ் செய்துகொண்டு செல்வார்கள், பாரதியார் பிடில் என்னும் இசைக்கருவியில் பல ஆண்டுகள் பயிற்சி செய்துவந்தமையால் தமது முதுமைப் பருவத்தில் தனியேயிருக்கும்பொழுது அதனை வாசித்துப் பொழுதுபோக்கி இன்புறுவர்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் 16-ம் பட்டத்தில் தலைவராக வீற்றிருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகருக்குப் பாரதியாரிடம் மிக்க அன்புண்டு. அவருடைய கல்வியறிவையும் இசை விருப்பத்தையும் அறச்செயல்களையும் அறிந்த பாரதியாருக்கும் அவர்பால் நன்மதிப்பு இருந்தது. சுப்பிரமணிய தேசிகரவர்கள் மாயூரத்திற்கு வந்த காலங்களில் பாரதியார் அவரைச் சென்று காண்பர். இருவரும் அன்போடு உரையாடி மகிழ்வர். பாரதியார் பல ஆண்டுகள் கதை செய்துவந்தமையாற் கிடைத்த வருவாயில் தமக்கும் தம்மை ஆதரித்த அன்பர்களுக்கும் உதவுதற்பொருட்டு ஒரு பகுதியை ஒதுக்கிவைத்துக்கொண்டு எஞ்சிய தொகையைச் சிவ தருமத்திற் பயன்படுத்த வேண்டுமென்றும், அதனைப் பொறுப்பாக ஏற்று நடத்திவருந் தகுதியுடையார் யாவரென்றும் ஆராய்ந்து முடிவு செய்துகொண்ட பின்னர்த் திருவாவடுதுறைக்குச் சென்று சுப்பிரமணிய தேசிகர் அவர்களிடம் தம் கருத்தை வெளியிட்டனர். மாயூரம் சிவன் கோயிலில் தாம் யோகப்பயிற்சி செய்துவரும் இடத்திலெழுந்தருளியுள்ள அகத்தீசுரருக்கு நாடோறும் இரவுநேரத்தில் தயிரன்னமாவது சம்பா அன்னமாவது படைத்து அந்த அன்னத்தைத் தேங்காய்த் துவையலுடன் சேர்த்து, தலயாத்திரை செய்துவரும் அன்பர்கள் அறுவருக்கு வழங்கவேண்டுமென்றும், சிதம்பரத்திலும் சில கட்டளைகளை நடத்திவர வேண்டுமென்றுங் கூறித் தம்மிடமிருந்த ரூபா மூவாயிரத்தையுங் கொடுத்தார். அவர் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுப் பாரதியார் கருத்தின்படியே குறைவின்றி நடத்தி வந்தார்.

இங்ஙனம் வாழ்ந்துவந்த பாரதியார் தமது தொண்ணூற்றைந்தாவது ஆண்டில் சிவராத்திரியன்று தம் பூதவுடலை நீத்து இறைவன் திருவடி நீழலிற் கலந்தாரென்பர்.

இதுகாறுங் கூறியவற்றால், பாரதியார் வடமொழி தென் மொழிப் பயிற்சியும் வேதாந்த நூல் யோக நூல்களின் அநுபவமும் சிவநேயச் செல்வமும் வாய்க்கப்பெற்றவரென்பதும், கருநாடகஇசையிலும் இந்துஸ்தான இசையிலும் சிறந்த புலமையுடையாரென்பதும், எளிமையும் இனிமையும் உயர்ந்த கருத்துக்களும் அமையும்படி புதிய முறையில் இசைப்பாடல் களியற்றும் வன்மையமைந்தவரென்பதும், சிவகதைகளையும் சிவனடியார் வரலாறுகளையும் பலவகை இசைப்பாடல்களில் அமைத்துப் பாடி எல்லோருடைய உள்ளத்தையும் கனிவிக்கும் இயல்பு மிக்காரென்பதும், பிரமசரிய நிலையிலும் சிவவழிபாட்டிலும் சிறிதும் பிறழாத சீலமுடையாரென்பதும், இறைவனுடைய உண்மைப்புகழ் யாண்டும் பரவவேண்டுமென்னும் பெருநோக்குடையாரென்பதும், தமிழிசைக்குச் சிறந்த தொண்டு புரிந்தவரென்பதும், தாம் சிவகதை செய்து ஈட்டிய பொருளைச் சிவனடியார்களுக்கே பயன்படுத்த வேண்டுமென்னும் உறுதிகொண்டு அப்பொருளைத் தக்கதோர் அறத்துறையில் நிலைபெறச் செய்தாரென்பதும் பிறவும் பெறப்பட்டன. இத்தகைய நற்குண நற்செயல்கள் வாய்ந்த பெரியாரியல்புகளைத் தமிழிசை பயிலும் மாணவர்கள் அறிந்து அமைந்து ஒழுக வேண்டுமென்பது குறித்தே அவர் வரலாறு சுருக்கி எழுதப்பட்டது. இதன் விரிவையறிய விரும்புவோர் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வெ. சாமிநாத ஐயரவர்கள் எழுதிய "கோபாலகிருஷ்ண பாரதியார்" என்னும் புத்தகத்தைப் படித்து அறிவார்களாக.

குறியீடுகளின் விளக்கம்.

ஆ	ஆரோகணம்.
அ	அவரோகணம்.
ப	பல்லவி.
அ. ப.	அனுபல்லவி.
ச	சரணம்.
*	இது பாட்டின் சாகித்தியத் துவக்கத்தைக் குறிக்கும்.
,	இது ஒரு அட்சரகால நிறுத்தத்தைக் குறிக்கும்.
;	இது இரண்டு அட்சரகால நிறுத்தத்தைக் குறிக்கும்.
|	இது ஒரு தாள வட்டத்தின் பகுதியைக் குறிக்கும்.
‖	இது ஒரு தாள வட்டத்தின் முடிவைக் குறிக்கும்.
-	இது சுரங்களுக்கு இடையே இடப்பட்டிருந்தால் அந்தந்த இராகத்திற்குத் தக்கபடி பதங்களை (சுர அடுக்குகளை)ப் பிரித்துப் பாடுவதைக் குறிக்கும்.
.	இது சுரங்களுக்கு மேலிருந்தால் தாரஸ்தாயியையும், சுரங்களுக்குக் கீழிருந்தால் மந்தரஸ்தாயியையும், சாகித்தியத்தைத் தொடர்ந்துவந்தால் அகார, இகார, உகாரங்களையும் குறிக்கும்.
=	இது சுரங்களின் இடையே இடப்பட்டிருந்தால் ரூபகம், சாய்ப்பு, சம்பை இம்மூன்று தாளங்களில் வரும் இரண்டாவது தட்டைக் குறிக்கும்.
——	இது சுரங்களுக்குக் கீழிருந்தால் மத்திம காலம் என்பதைக் குறிக்கும். (அதாவது இரண்டாங்காலம்).

═══	இது சுரங்களுக்குக் கீழிருந்தால் துரிதகாலம் என்பதைக் குறிக்கும். (அதாவது மூன்ருங்காலம்)
~~	இது சுரத்தின்மேல் இடப்பட்டிருந்தால், அந்தந்த இராகத்திற்குத் தக்கவாறு சுரங்களை அசைத்துக் கம்பிதமாகப் பிடிக்கவேண்டும் என்பதைக் குறிக்கும்.
+	இது சுரங்களுக்கு மேலிட்டிருந்தால் வேறு சுர ஸ்தானம் என்பதைக் குறிக்கும். (உதாரணம்) காம்போதிக்கு வரும் காகலிநிஷாதமும், பைரவிக்கு வரும் சதுசுருதிதைவதமும், ஆனந்தபைரவிக்கு வரும் அந்தரகாந்தார, சதுசுருதிதைவத, காகலிநிஷாதமும், சாரங்காவிற்கு வரும் சுத்தமத்திமமும் இன்னும் இம்மாதிரி வரும் சுரங்களையும் குறிக்கும்.
{ }	இது பல்லவியின் முடிவையும், அனுபல்லவியின் முடிவையும் குறிக்கும்.
	இப்புத்தகத்தில் காணப்படும் "சாய்ப்பு" என்பதை "மிசிர சாய்ப்பு" எனக்கொள்க. ஷெ தாளங்களில் எழுதிய கீர்த்தனங்கள் (3–4) ஆக 7 அட்சரங்களாகவும் (6 – 8) ஆக பதினுன்கு அட்சரங்களாகவும் சுரப்படுத்தி எழுதப்பட்டிருக்கும்.

உ

பாடல் முதற் குறிப்பட்டவணை

தொடர் எண்	துவக்கம்	இராகம்	மேளம்	தாளம்	பக்க எண்
1	அரகர சிவசங்கர	நாட்டை	36	ரூபம்	166
2	அறிவுடையோர்	சக்கரவாகம்	16	சம்பை	316
3	அற்புத நடனம்	நாதநாமக்கிரியை	15	ஆதி	162
4	ஆடியபாத தரிசனம்	தர்பார்	22	,,	361
5	ஆடியபாதத்தை	சாவேரி	15	,,	303
6	ஆடியபாதமே கதி	வராளி	45	,,	122
7	ஆடியபாதா	சங்கராபரணம்	29	சாய்ப்பு	113
8	ஆடின தாண்டவம்	பிலகரி	,,	,,	151
9	ஆடுஞ்சிதம்பரமோ	பியாக்	,,	ஆதி	341
10	ஆனந்தக்கடல்	தோடி	8	ரூபகம்	215
11	ஆனந்தக் கூத்தாடினர்	கல்யாணி	65	,,	250
12	இது நல்ல சமயமையா	தன்யாசி	8	ஆதி	256
13	இந்தச் சடலம்	கேதாரம்	29	ரூபகம்	308

தொடர் எண்	துவக்கம்	இராகம்	மேளம்	தாளம்	பக்க எண்
14	இந்தப்பிரதாபமும்	சுத்தசாவேரி	22	ஆதி	35
15	இரக்கம் வராமல்	பேஹாக்	29	ரூபகம்	13
16	இன்னமும் ஒருதரம்	யதுகுலகாம்போதி	28	ஆதி	283
17	இன்னம் வரக்காணேன்	செஞ்சுருட்டி	,,	,,	358
18	உனது திருவடி	சரசாங்கி	27	,,	91
19	எங்கள் குருநாதருடைய	சுருட்டி	28	ரூபகம்	70
20	எங்கே தேடிப்பிடித்தாய்	சௌராஷ்டிரம்	17	ஆதி	61
21	எந்நேரமும் உன்றன்	தேவகாந்தாரி	29	,,	99
22	எப்போ தொலையும்	கௌரீமனோகரி	23	சாய்ப்பு	78
23	எப்போ வருவாரோ	கமாசு	28	ஆதி	226
24	என்ன சாமி நீர்	சுத்தசாவேரி	22	,,	177
25	ஏதோ தெரியாமல்	அமீர் கல்யாணி	65	ரூபகம்	174
26	ஒருதரமாகிலும்	அம்சத்தொனி	29	ஆதி	205
27	கண்டேன் கலிதீர்ந்தேன்	கல்யாணி	65	ரூபகம்	32
28	கண்ணாலே கண்டேன்	சாவேரி	15	சாய்ப்பு	219

29	கண்ணுலொருதரம்	ஆரபி	29	ஆதி	158
30	கனகசபாபதிக்கு	அடாணு	,,	ரூபகம்	39
31	கனகசபாபதி தரிசனம்	தன்யாசி	8	ஆதி	312
32	கனகசபேசன் சேவடி	கமாசு	28	,,	147
33	கனகசபைத் திருநடனம்	சுருட்டி	,,	ஆதி	54
34	காணுமலிருக்கலாகாது	சௌராட்டிரம்	17	சாய்ப்பு	369
35	கிருபைபாரம்மா	காம்போதி	28	ஆதி	188
36	குஞ்சித பாதத்தை	பந்துவராளி	51	ரூபகம்	272
37	குருவைப் பணிந்து	மத்தியமாவதி	22	ஆதி	65
38	கைவிடலாகாது	நாயகி	,,	,,	109
39	சம்போ கங்காதரா	ஈசமனோகரி	28	,,	349
40	சரணுகதியென்றுனே	சங்கராபரணம்	29	,,	143
41	சற்றும் அச்சமில்லாமல்	காம்போதி	28	,,	180
42	சிதம்பரம் என்றொரு	வேகடை	29	,,	235
43	சித்தஞ் சிதம்பரத்தே	கேதாரகௌளை	28	சாய்ப்பு	86
44	சிவசிதம்பரமென்று	காம்போதி	,,	ஆதி	44
45	சிவோகமென்கிற	சக்கரவாகம்	16	,,	195
46	சொப்பனங்கண்டு	ஆனந்தபைரவி	20	சாய்ப்பு	352

தொடர் எண்	துவக்கம்	இராகம்	மேளம்	தாளம்	பக்க எண்
47	தந்தாலுந்தரட்டும்	பலஹம்சா	28	ஆதி	129
48	தந்தைதாயிருந்தால்	முகாரி	22	சாய்ப்பு	191
49	தரிசனங் கண்டார்க்கு	மோகனம்	28	ரூபகம்	328
50	தள்ளுவாரோ	புன்னாகவராளி	8	,,	299
51	தாண்டவ தரிசனம்	ரீதிகௌளை	22	,,	95
52	தா தா தா நீயாடிய	கரகரப்பிரியா	,,	ஆதி	365
53	தாதெய் என்றாடுவார்	தோடி	8	,,	262
54	தாத்தை தாத்தை	சாவேரி	15	ஆதி	198
55	திருவடி சரணமென்று	காம்போதி	28	,,	170
56	தில்லைச் சிதம்பரம்	பூர்வகல்யாணி	53	சாய்ப்பு	239
57	தில்லை தில்லை என்றால்	காப்பி	22	ஆதி	18
58	தில்லைத்தலமென்று	சாமா	28	,,	22
59	தில்லையம்பலத்தானை	சுருட்டி	,,	சாய்ப்பு	343
60	தினந்தினம் நடராசர்	தன்யாசி	8	ரூபகம்	208
61	தெரிசிக்கவேணும்	நாட்டைக்குறிஞ்சி	28	ஆதி	277
62	தென்புலியூர்ச் சிவகாமி	பந்துவராளி	51	திசிரகதி	368

63	தேகம் இப்படி	சௌராட்டிரம்	17	சாய்ப்பு	133
64	தேடிஅலேகிருயே	நாதநாமக்கிரியை	15	ஆதி	106
65	தேவாசகந்நாதா	அம்சத்தொனி	29	,,	185
66	தொண்டரை	சகாரு	28	,,	295
67	நடனசபேசா	கானடா	22	,,	325
68	நடனமாடினுர் ஐயர்	மாயாமாளவகௌளே	15	ரூபகம்	230
69	நடனமாடினுர் வெகு	வசந்தா	17	அட	266
70	நாரென்றும்	ஆகிரி	14	ரூபகம்	50
71	நீசனுய்ப் பிறந்தாலும்	யதுகுலகாம்போதி	28	சம்பை	336
72	பகலாவது உன்றனே	அடாணு	29	ரூபகம்	212
73	பத்தி பண்ணிக்கொண்டு	உசேனி	20	,,	289
74	பவசாகரம்	சண்முகப்பிரியா	56	ஆதி	5
75	பாதமே துணே	அம்சத்தொனி	29	,,	2
76	பார்க்கப்பார்க்க	அரிகாம்போதி	28	ரூபகம்	259
77	பார்த்துப் பிழையுங்கள்	மத்தியமாவதி	22	,,	280
78	பிச்சைக்காரவேஷம்	கௌளிபந்து	15	சாய்ப்பு	57
79	பிறவாத முத்தி	தன்யாசி	8	ஆதி	74
80	பிறவாத வரந்தாரும்	ஆரபி	29	,,	9

தொடர் எண்	துவக்கம்	இராகம்	மேளம்	தாளம்	பக்க எண்
81	பெரியோரேயான்	சுருட்டி	28	ஆதி	140
82	பேயாண்டி தனைக்கண்டு	சாரங்கா	65	சாய்ப்பு	26
83	பொன்னம்பலவாணன்	சாவேரி	15	ரூபகம்	201
84	போதும் போதுமையா	கமலாமனோகரி	27	ஆதி	333
85	மனது அடங்குவதால்	கௌளிபந்து	15	,,	137
86	மனதே உனக்கிதமாய்	ஆனந்தபைரவி	20	ரூபகம்	320
87	மாய வாழ்க்கையை	உசேனி	,,	ஆதி	118
88	மோசம் வந்ததே	ஆபோகி	22	,,	83
89	வருவாரோ	யதுகுல காம்போதி	28	,,	245

இந்நூலில் அடங்கியுள்ள இராகங்களின்

பெயர் விளக்கம்

எண்	இராகம்	பாட்டு எண்
1	அடாணா	10, 52.
2	அமீர்கல்யாணி	41.
3	அம்சத்தொனி	1, 44, 50.
4	அரிகாம்போதி	62.
5	ஆகிரி	12.
6	ஆபோகி	20.
7	ஆரபி	3, 37.
8	ஆனந்தபைரவி	76, 84.
9	ஈசமனோகரி	83.
10	உசேனி	28, 69.
11	கமலாமனோகரி	79.
12	கமாசு	35. 55.
13	கரகரப்பிரியா	87.
14	கல்யாணி	8, 60.
15	காப்பி	5.
16	காம்போதி	11, 40, 43, 45.
17	கானடா	77.
18	கேதார கௌளை	21.
19	கேதாரம்	73.
20	கௌரிமனோகரி	19.
21	கௌளிபந்து	14, 32.
22	சகானா	70.
23	சக்கரவாகம்	47, 75.
24	சங்கராபரணம்	27, 34.
25	சண்முகப்பிரியா	2.
26	சரசாங்கி	22.
27	சாமா	6.
28	சாரங்கா	7.
29	சாவேரி	48,. 49, 54, 72.
30	சுத்தசாவேரி	9, 42.
31	சுருட்டி	13, 17, 33, 82.

எண்	இராகம்	பாட்டு எண்
32	செஞ்சுருட்டி	85.
33	சௌராட்டிரம்	15, 31, 90.
34	தர்பார்	86.
35	தன்யாசி	18, 51, 61, 74.
36	தேவகாந்தாரி	24.
37	தோடி	53, 63.
38	நாட்டை	39.
39	நாட்டைக்குறிஞ்சி	66.
40	நாதநாமக்கிரியா	25, 38.
41	நாயகி	26.
42	பந்துவராளி	65, 88.
43	பலஹம்சா	30.
44	பியாக்	4, 81.
45	பிலகரி	36.
46	புன்னுகவராளி	71.
47	பூர்வகல்யாணி	58.
48	மத்தியமாவதி	16, 67.
49	மாயாமாளவகௌளை	56.
50	முகாரி	46.
51	மோகனம்	78.
52	யதுகுலகாம்போதி	59, 68, 80.
53	ரீதிகௌளை	23.
54	வசந்தா	64.
55	வராளி	29.
56	வேகடை	57.

ஆனதாண்டவபுரம்

கோபாலகிருஷ்ண பாரதி அவர்கள்

இயற்றிய

தமிழிசைப் பாடல்கள்

சிதம்பரம் திரு. இராசரத்தின தீட்சிதர் அவர்கள் பாடிக்காட்டிய முறையைத் தழுவி
அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து இசைக்கல்லூரி வீணை ஆசிரியர்
திரு. V. S. கோமதி சங்கர ஐயர் அவர்களால் இசையமைப்புக்கள் திருத்தஞ்செய்யப்பெற்றவை.

1

இராகம்:	அம்சத்தொனி	ஆ: சரிக பநிச்	{	29-வது மேளத்திற்
தாளம் :	ஆதி	அ: ச்நிப கரிசா		பிறந்தது.

பல்லவி

பாதமே துணை ஐயனே - நின்
பாதமே துணை ஐயனே பாத.

அனுபல்லவி

பாதமே துணை யல்லால் வேறொரு
சேதிகளு நானறிந்திலேன் - நின் பாத.

சரணம்

பாலனுக் கருள் செய்த பராபர
பாலகிருஷ்ணன் கவிக்குத் தயாகர
சீலமுள்ள சிவ காமி மனோகர
தெய்வ நடம்புரி சின்மய குஞ்சித பாத.

ப. ;-பா ; ப க கா ரீ - க ப க ரி | ச்ா - சநி் பா கரி | கா ; ; - கா ||
.-பா . த . மே . - து . ணை . | . - ஐ . . ய . | னே . . - நின்

;-பாச்ா ச்நிபாகா - நி ப க ரி | சா - சநிபா கரி | கா ; ; - சரி ||
.-பா . த , மே . - து , ணை . | . . - ஐ . . ய . | னே . . - நின்

கா - ப நி ச்ரி ச்நிபாகா - நி ப க ரி | சா - சநிபா கரி | கா ; ; - சரி ||
. - பா . . . த . மே . - து . ணை . | . - ஐ . . ய . | னே . . - நின்

{ கா - ப நிச்ரி க்ரி ச் நி பா - க ப க ரி | சரி - சநிபா ரிச | ரீ ; சா ; } ||
{ . - பா . . . த . மே . . - து . ணை . | . . - ஐ . . ய . | னே . . . }

அப. ; - ச்ா ; ரீ க்ா க்ா ரீ - ச் ரி | க்ா ரீ ரீ ச்ா | ச் நி பா ச்ா ச்ா ||
. - பா . த மே . . - துணை | ய ல் லா ல் | வே . . ஒரு ரு

; - ச்ா ; ரீ க்ா க்ா ரீ - ச் ரி | க்ா ப்ா ரீ ; | ச் நி பா ரி ச் ரீ ||
. - பா . த மே . . - து ணை | ய ல் லா ல் | வே . . ஒரு . ரு

; - ச்ா ரி க் ரீ - ச் நி பா ரீ ; | ; - ச் ரி ச் நி பா | கா ரீ க ப க ரி ||
. - சே . . தி - க . ளு நா . | ன் - அ . றி ந் தி | லே ன் நி ன் . .

{ ச ரி - கா நி ப பக கா ரீ - க ப க ரி | சா - ச நி பா ரி ச | ரீ ; சா ; } ||
{ . . - பா . . த . மே . - து , ணை . | . - ஐ . . . ய . | னே . . . }

ச. ; - ச்ா ; ச் நி பா ; - பா கா | ; - கா , நி பா | ரீ ; சா சா ||
. - பா . ல . னு க் - க ருள் | . - செ ய் த ப | ரா . ப ர

; - ச நி பா பா - சா ; சா - சா | ரீ ; கா சா - | ரீ ; ரீ ரீ ||
. - பா , . ல - க்ரு ஷ் ணன் - க | வி க் கு த் த - | யா . க ர

; - நீ ; ரீ - கா ரீ - கா பா | ; - ச் நி கா பா | ச்ா நீ ச்ா ரீ ||
. - சி . ல - முள்ள - சி வ | . - கா . . மி | ம ஞே க் ர

; - க்ா : ரீ - ச் நி பா ரி ச் ரீ | : - ச் நீ ப பா | கா ; க ப க ரி ||
. - தெ ய் வ - ந . டம் பு . ரி | . - சி ன் ம ய | கு ஞ் சி . த .

ச ரி - கா நி ப ப க கா ரீ - க ப க ரி	ச்ரி - ச நி பா ரிச	ரீ ; சா ;
. . - பா . . த . மே . - து . ணே .	. . - ஐ . . ய .	னே . . .

2

இராகம் : சண்முகப்பிரியா.
தாளம் : ஆதி

ஆ: சா - ரிகமா - பதநிசா
அ: ச்நிதபம - காரிசா - நிசதாநிசா

56-வது மேள கர்த்தா

பல்லவி

பவ சாகரம் கரை யேறலாம் பவ.

அனுபல்லவி

தவமேவும் தென் புலியூரில் ஈசன்
தன்னடி வணங்கித் தானே தானேயாஞல் பவ.

சரணம்

கற்ற நூல்களால் காமநோய்கள் போமோ
சித்த சுத்தி வந்து தேறுமோ தேருதே
பத்தி பண்ணிப் பாடிப் பாலகிருஷ்ணன் போற்றும்
சிற்றம்பலவனைச் சிந்தனைகள் செய்தால் பவ.

ப.	; ; ;	- * பா மா - கா ; ரீ	சா ; ; - நீ	சா ரீ கா மா ‖
	. . .	- ப வ - சா . க	ரம் . . - க	ரை யே . ற
2.	ப மகரிகம	- * ப தபம - கா ; ரீ	சா ; ; - மா	மா ப த நீ த ப ‖
	லா . . . . ம்	- ப . வ . - சா . க	ரம் . . - க	ரை யே . . ற .
3.	ப மகரிகம	- * பா தபமா - கா ; ரீ	சா ; ; - நிச்	ரீக்ரி ச்ாரிச் நிதபா ‖
	லா . . . . ம்	- ப வ . . - சா . க	ரம் . . - க	ரை . . யே . . . . ற

4. ப மகரிகம - * நீ தபமா - கா ; ரீ | சா ; ; - பத் | நிச ரி கமப த்நி ||
லா . . . . ம் - ப வ . . - சா . க ரம் . . . - க. ரை . யே . . . ற .

{ ச்ரிச் நிதபம - * நீ தபமா - கா ; ரிச | ரீ ; ; ; | சா ; ; ; } ||
{ லா . . . . . ம் - ப வ . . - சா . க ரம் . . . . }

அ.ப. ; ; ; - * பா தா பா ; மா - | ப த் நீ த்ா - த்ா | நீ ச்ா ; ச்ா ||
. . . - த வ மே . வும் - தென் . . - பு லி யூ . . ரில்

2. நீ , தபம - * பா தா,நி தபபா ; மா - | ப த் நீ த் - நீ | ச்ா ரிக்ரி ச்ா ச்நி ||
ஈ . சன் . - த வ . . மே . . . வும் - தென் . . - பு லி யூ . . . ரில்

3. ரிச்நிதபம - * பா தா ,நி தபபா ; மா - | ப த் நீ த்ா - நீ | ச்ா ரிக்ம்ா க்ா ||
ஈ . . சன். - த வ . . மே . . . வும் - தென் . . - பு லி யூ . . ரில்

ரீ , ச்ா , - * நீ நீ ச் ரி ச்ரிக்ரி ரிச் - | தா , பா , - பா | ப ம நீ தா பா ||
ஈ , சன். - தன் ன டி . . . . . வ . - ண ங் கி த் - தா னே . தா . னே

பமகரிகம	- * நீ தபமா - கா ; ரிச	ரீ ; ; ;	சா ; ; ;	‖
யா. . . ஞல்	- ப வ . . - சா . க .	ரம் . . .	. . . .	
ச. ; ; ;	- * சா ரீ ரி ரி ச நி சா	ரீ ; ; - பா	மா பாதப மரிகா	‖
. . .	- கற் ற நூ . . ல் க	ளா . ல் - கா	ம நோ . . . ய் கள்	
ரீ , சா ,	- * சநிரிச தா ; நீ	சா , சா , - ரீ	கா ப ம கா க ரி	‖
போ . மோ .	- சித் த . சு த் தி	வந் . து . - தே	று மோ . . தே .	
ரீ , சா ,	- * பத்திபண்ணிப்	பாடிப்பா	லகிருஷ்ணன்	‖ போற்றும்
ரு . தே .	- * சிற்றம்பல	வனேச்சிந்	தனேகள்	‖ செய்தால் (பவ.)

இதை அனுபல்லவிபோற் பாடுக.

குறிப்பு:—இந்த இராகலக்ஷியத்தில் ஆரோகணத்தின்போது ரஞ்சனேயை முன்னிட்டு சதுஸ்ருதிதைவதம் பிரயோகமாகின்றது. இது இயற்கையில் வருவதாகும்.

3

இராகம் : ஆரபி
தாளம் : ஆதி

ஆ: சரீ மபதா ச்ரீ
அ: ச்ரிதாப மகரீச

29-வது மேளத்திற் பிறந்தது.

பல்லவி

பிறவாத வரந் தாரும் என்னையா பிறவாத வரந் தாரும் — பிறவா.

அனுபல்லவி

அறிவுடையோர் தொழு தேத்திய தில்லைப் பொன்
அம்பலவா இன்னம்பல யோனியில் — பிறவா.

சரணம்

எண்பத்து நான்கு லட்சம் ராசிகளில் எடுத்தெடுத்துப் பிறந் திறந்துமே
புண்பட்டது போதும் போதும் இனிமேல் புத்தி தெரிந்த தையே பொருள்

நன் பட்டொடு மனைவி மக்கள் வாழ்வினில் நாள்கடோறும் மனவிலாசங் கழிந்து
இன்பத்துடன் கோ பாலகிருஷ்ணன் தொழு தேத்திய சகதீசனே நடராசனே பிறவா.

ப. ; - த ச் தா பா ; - ம க ரி ரி சா | ரீ ; ம க ரீ | ; - ரி ச ரீ ம ப ||
. - பி ற வா . . - த . . வ ரங் | தா . ரு ம் . | . - எ ன் னை யா .

, ம - பா த ச் தா பா மபதப - மகரி ரிசா | ரீ ரி ப ம க ரீ | ம க ரி ச ரீ ப ம ||
. . - பி ற . வா . . . . . - த . . வரங் | தா . . ரு ம் . | எ ன் . . னை யா .

தா த ச் த ப பா மபதப - ம க ரி ரி சா | ரீ ரி ப ம க ரீ | ம க ரி ச ரீ ப ம ||
பி ற . வா . . . . . . த . . வ ரங் | தா . . ரு ம் . | எ ன் . . னை யா .

தா த ரி ச் நி த த ப - ப ம க ரி ரி சா | ரீ த ப ம க ரீ | ம க ரி ச ரி ம ப த ||
பி ற . வா . . . . - . த . . வ ரங் | தா . . ரு ம் . | எ ன் . . னை . யா .

ச் நி த ரி ச் நி தாநிதபாதப மகரி ரி சா | ரீ மபதப ம க ரீ | ம க ரி ச ரி ம ப த ||
பி . ற . வா . . . . த . . . . . வ ரங் | தா . . . . ரு ம் . | எ ன் . . ஊ . யா .

ச்ரிப் ம்க்ரீச்ரச்நி தாநிதபாதப மாமகரீசா | ரீ ரி ப ம க ரீ | ம க ரி ச ரீ ம ப ||
பிற . வா . . . . . த . . . . . . வ . ர ங் | தா . . ரு ம் . | எ ன் . . ஊ யா .

{ , ம - பா த ச் - தா பா ; - ம க ரி ரி சா | ரீ ப ம பா ; | ; ; ; ; } ||
{ . . பி ற . வா . . த . . வ ரங் | தா . . ரு ம் | . . . . }

அ.ப. ப ம ப த ச்ா - ச் ரி ம்க்ரிரிச்நி த த | ச்ா ; ; - த ரி | ச்நித ப ம க ரி ம ||
அறிவுடையோர்- தொழு தேத் திய தில் . . | லை . . . . . . | . . . .

ப ம ப த ச்ா ச் ரி - ம்க்ரிரி ச்ா ச் - ச் | தா த்ரி ச்ா , - த | பா மக - ரி ம ப த ||
அறிவுடையோர்தொழு-தேத்தியதில்லைப்-பொன் | னம் பல வா . - இன் | னம் பல - யோ . னி யில்

{ ச்நி த்ரி ச்நி - தாநிதபாதப மகரி ரி சா | ரீ ப ம பா ; | ; ; ; ; } ||
{ பி . ற . வா . - . . . த . . . . . வ ரங் | தா . . ரும் . | . . . . }

ச. தா தபப - மபத பா ப - மகரிதப - | ம க ரி ரி ச - தசா | ரி பா ப - ம க ரீ ||
எண்பத்து - நான்குலட்சம் - ரா. சிகளில்- எடுத்தெடுத்துப் - பிறந் திறந்து - மே. .

ரி ம பா த த ச்ா ச் - தா ப ம க ரீ | , - ம க ரி ரி ச ரிம | பா ; ; - ப ம ||
புண் பட்டது போதும் - போதும் இனிமேல் . . - புத்திதெரிந்ததை. யே . . - பொருள்

தா தப ப ப - மபதபா ப - மகரிரி - | ச ஙி த சா ச - ம க | ரி ப ம தா - ச் ச் ச் ||
நன் பட்டொடு - மனைவிமக்கள் - வாழ்வினில் நாள்கடோறும் - மன விலா . சங் - கழிந்து

ச் ஙி தா ச் ச் - ச்ா ரீ ரி ம் க் ரி - ச் ரி | ச்ா ச் ச் - ப த பா | ப ப - ம க ரி ம ப த ||
இன் பத்துடன் - கோபாலக்ருஷ்ணன் - தொழு தேத்திய - சகதி சனே - நடரா . சனே

{ ச்ஙி த்ரி ச்ஙி - தா†ஙித பாதப மகரி ரிசா | ரீ ப ம பா ; | ; ; ; ; } ||
{ பி . ற . வா . - . . . த . . . . . வரந் தா . . ரும் . . . . .

† இக் குறி கைசிகி நிஷாதத்தைக் குறிக்கும்.

4

இராகம் : பியாக்   ஆ.: ச க ம ப நி த நி ச்
தாளம் : ரூபகம்   அ.: ச்நிதநிதபம்பகமகரிச

{ 29-வது மேளத்திற் பிறந்தது.

பல்லவி

இரக்கம் வராமற் போன தென்ன காரணம் என் சாமி   இரக்.

அநுபல்லவி

கருணைக் கடலென் றுன்னைக் காதிற்கேட்டு நம்பிவந்தேன்   இரக்.

சரணம்

1, ஆல மருந்தி அண்டருயிரை ஆதரித்த உனது கீர்த்தி
பால கிருஷ்ணன் பாடித்தினமும் பணிந்திடும்நட ராசமூர்த்தி   இரக்.

2, பழி எத்தனை நான் செய்யினும் பாலித்திடுஞ் சிதம்பரமென்று
மொழிகற்றவர் வழியுற்றுனை முப்பொழுதும் மறவேனே   இரக்.

ப. சா சா = ரீ சா சா ; | நி ச க ரி = சா நி ச க ரி கா |
இ ரக் கம் . வ . ரா . . . மற் போ . . . ன

ம க ப ம் = பா கா ; மா | கா ; = ; க ரி க ம க ரி ||
தெ ன் . . ன கா . ர ணம் . . என் சா . மி .

2. சா சா = ரீ சா சா ; | நி ச க ரி = சா நி ச க ரி கா |
இ ரக் கம் . வ . ரா . . . மற் போ. . . ன

ம க ப ம் = நி த ச் நி <u>தபபா</u> மா | கா ; = ; க ரி ப ம க ரி ||
தெ ன் . . ன . கா . . . . ர ணம் . . என் சா . மி .

3. சா சா = ரீ சா சா ; | ப ம் க ம = கா ப ம் நி த ச்ா |
இ ரக் கம் . வ . ரா . . . . மற் போ . . . ன

ச் நி க் ரி = ச்ா நி ச் நி த ப ம் | க ம ப த = ம் ப க ம க ரி ச நி ||
தெ ன் . . ன கா . . . ர . ணம் . . என் சா . . . மி .

சா சா = ரீ சா சா ; | நி ச க ரி = சா நி ச க ரி கா |
இ ரக் கம் . வ . ரா . . . மற் போ . . . ன

{ ம க பா = பா ப ம் த ப க ம | கா ; = ; க ரி ச நி சா } ||
{ தென் . ன கா . . . ர . ணம் . . . . }

அ. ப. ; க ம = பா நி த ச்ா ச்ா | நி ச் நி த = பா நி த ச்ா ச்ா |
. க ரு ஊ . க் க ட லெ ன் . . . று ன் . ஊக்

; பா = தா நி ச் நி த ப ம் | க ம பா = ப ம் க ரி கம கா ||
. கா திற் கே . . ட் டு . ந ம் . பி . வ ந் . . தே

; க ம = பா நி த ச்ா ச்ா | நி ரி நி த = ப ம் நி த க் ரி ச்ா |
ன் க ரு ஊ . க் க ட லெ ன் . . . . று ன் . . ஊக்

; ப = தா நி ச் நி த ப ம் | க ம நி த = ப ம் க ரி க ம க ரி ||
. கா திற் கே . . ட் டு . ந ம் . . பி . வ ந் . . தே ன்

சா சா = ரீ சா சா ; | நி ச க ரி = சா நி ச ரி க கா ||
இ ரக் கம் . வ . ரா . . . மற்போ . . . ன

{ ம க பா = பா ப ம் த ப க ம | கா : = ; க ரி ச நி சா } ||
{ தெ ன் . ன கா . . . ர . ணம் . . . . }

ச. ; ச்ா = நீ தா ப ம் பா | ; க ம = ப ம் கா ம ரி கா |
. . ஆ ல ம ரு ந் தி . அ ண் ட . ரு யி . ரை

; க ம = பா நி த ச்ா ச்ா | ; ச் நி = , த ப ம் தா பா ||
. ஆ . த ரி . த் த . உ ன . து இ . ர்த் தி

; ச்ா = நீ தா பா , ம் | க ம ப த = நி ச் கா மா கா |
. ஆ ல ம ருந் . தி அ ண் . . ட . ரு யி ரை

; ம க = ப ம் நி த ச்ா ச்ா | ம் ம் க் ரி = ச்ா நி ச் நி த பா ||
